**சுருக்கம்**

சுற்றுச்சூழல் – பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினால் ஏற்படும் சீர்கேடுகள் – விழிப்புணர்வு நடவடிக்கைகளை "Message on Wheels" என்ற திட்டத்தின் படி மேற்கொள்வது – செலவினம் ரூ. 64 இலட்சம் ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுச்சூழல் – வனத் (சு.சூ.2) துறை**

திருவள்ளுவர் ஆண்டு – 2044
விஜய, கார்த்திகை – 5

அரசாணை (டி) எண்.412 நாள் : 21.11.2013

படிக்க :

இயக்குநர், சுற்றுச்சூழல் துறை கடித எண்.1066/ப்பி2/2013, நாள்.29.05.2013 மற்றும் 2.09.2013

----

**ஆணை:-**

2013–2014–ம் ஆண்டிற்கான சுற்றுச்சூழல் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (சுற்றுச்சூழல்) அவர்கள், பயன்படுத்தியபின் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டினைக் குறைக்க வேண்டுமென்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில், 2013–2014–ம் ஆண்டில் பிளாஸ்டிக் பயன்பாட்டினால் ஏற்படும் சீர்கேடுகள் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை "Message on Wheels" என்ற திட்டத்தின்படி, மாவட்டம் ஒன்றிற்கு ரூ.2 லட்சம் வீதம், அனைத்து மாவட்டங்களிலும் ரூ.64 லட்சம் செலவில் மேற்கொள்ளப்படவுள்ளது எனவும், இத்திட்டத்தின் மூலம் பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணாக்கர்களுக்கு பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டின் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் எனவும் அறிவித்தார்.

2. மேற்கண்ட அறிவிப்பு தொடர்பாக, சுற்றுச்சூழல் துறை இயக்குநரிடமிருந்து மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பெறப்பட்ட கருத்துருவில், பிளாஸ்டிக் பயன்பாட்டினால் ஏற்படும் சீர்கேடுகள் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை "Message on Wheels" என்ற திட்டத்தின் கீழ், அரசு சாரா நிறுவனங்கள் மூலமாக, பண்பாடு சார்ந்த கிராமிய பாடல்கள், கிராமிய நடனங்கள், தெரு கூத்து, வீதி ஓர நாடகங்கள், ஊர்வலங்கள், வில்லுப்பாட்டு, போட்டிகள், காணொளி படங்கள் ஆகிய கலை நிகழ்ச்சிகள் மூலம் அனைத்து மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் மாவட்டங்கள் தோறும் கீழ்க்கண்ட வகையில் நடத்தப்பட உள்ளதாக தெரிவித்து உள்ளார்:-

ஒரு மாவட்டத்திற்கு 20 கலை நிகழ்ச்சிகள், ஓர் கலை நிகழ்ச்சிக்கு ரூ. 9000/–
என்னும் வீதத்தில் = ரூ.1,80,000/–

| | | | |
|---|---|---|---|
| (i) | 32 மாவட்டத்திற்கு (ரூ.1,80,000 X 32) | = | ரூ.57,60,000/– |
| (ii) | பிளாஸ்டிக் உபயோகத்தினால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் கையேடுகள், போஸ்டர்கள் மற்றும் ஸ்டிக்கர்ஸ் போன்றவை | = | ரூ. 6,40,000/– |
| | **மொத்தம்** | = | **ரூ. 64,00,000/–** |

எனவே, இந்நடவடிக்கைக்காக மாவட்டத்திற்கு ரூ.2 லட்சம் வீதம், 32 மாவட்டங்களுக்கு ரூ.64 லட்சம் வழங்குமாறு சுற்றுச்சூழல் துறை இயக்குநர் அரசை கோரியுள்ளார்.

(த.பி.பா.)

**3.** சுற்றுச்சூழல் துறை இயக்குநரின் கருத்துருவினை, அரசு கவனமாக ஆய்வு செய்து, ஏற்று, பிளாஸ்டிக் பயன்பாட்டினால் ஏற்படும் சீர்கேடுகள் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை, “Message on Wheels” என்ற திட்டத்தின் கீழ், தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ள, மாவட்டத்திற்கு ரூ.**2** லட்சம் வீதம், **32** மாவட்டங்களுக்கு, ரூ.**64** இலட்சத்தினை (அறுபத்தி நான்கு லட்சம் மட்டும்) சுற்றுச்சூழல் துறை இயக்குநருக்கு விடுவித்து ஆணை வழங்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**4.** மேலே பத்தி **3**–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்கண்ட செலவுகணக்கின் கீழ் பற்று வைக்கப்படும்:-

“3435 – உயிரின வாழ்க்கைச் சூழலும் சுற்றுச்சூழலும் 03 –சுற்றுச்சூழல் ஆராய்ச்சி, உயிரின வாழ்க்கை சூழலை மீண்டும் உருவாக்குதல் – 003 – சுற்றுச்சூழல் குறித்த பயிற்சி – JE மக்கிப்போகாத ப்ளாஸ்டிக் பொருட்களை மக்கள் பயன்படுத்துவதை தடுக்கும் பொருட்டு மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு சிறப்பு கல்வித் திட்டம் **– 09** உதவித்தொகை – **09** ஏனையவை

(துதொகு 3435 03 003 JE **0996**)

5. தேவையான கூடுதல் நிதி ரூ.**64** இலட்சம் (அறுபத்து நான்கு இலட்சம் மட்டும்) **2013–2014–**ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்திய நிதி ஒதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இதனை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள சுற்றுச்சூழல் துறை இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினத்தை **2013–2014–**ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதித்துறைக்கு அனுப்பும் போது தவறாமல் சேர்த்து அனுப்புமாறு சுற்றுச்சூழல் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**6.** இவ்வாணை நிதித் துறையின் **18.11.2013–**ம் நாளிட்ட அ.சா. எண். 64919/நிதி (கா.ப. (ம) மீ / **2013**–ல் அளிக்கப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது மற்றும் இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். **1992** (ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று இரண்டு).

(ஆளுநரின் ஆணைப்படி)

மோகன் வர்கீஸ் சுங்கத்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

இயக்குநர், சுற்றுச்சூழல் துறை, சென்னை – **15.**
மாநில கணக்காயர் (A&E), சென்னை – **18.**
மாநில கணக்காயர், சென்னை – **9.**
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – **9/35.**
உள்தணிக்கை அலுவலர் (Resident Audit Officer), தலைமைச் செயலகம், சென்னை – **9.**

**<u>நகல் :-</u>**

மாண்புமிகு அமைச்சர் (சுற்றுச்சூழல் ) துறை அவர்களின் சிறப்பு முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–**9.**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – **9.**
நிதித் (வ.செ.பொ. II / கா.ப. (ம) மீ.) துறை, சென்னை . **9.**
தேசிய தகவல் மையம், சென்னை –**9.**
இ.கோ./உதிரி.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்

(வே. சுகுமாரன்)
அரசு சார்பு செயலாளர்